உ
சிவமயம்



வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# தங்கவேலாயுதம் தேவேந்திரா

அவர்களின்

சிவபதப் பேறுகுறித்த

# நினைவு மலர்

04.02.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

அன்பின் உறைவிடமாய்
ஆனந்தத்தின் இருப்பிடமாய்
இறைவனில் பற்றுள்ளவளாய்
ஈவிரக்கம் கொண்டவளாய்
உதவிகள் பல புரிந்து
ஊர் போற்ற வாழ்ந்து
என்றும் எம் நினைவிலே
ஏணியாக உயர நின்று
ஐம்பூதமாய் காத்து நின்று
ஒற்றுமையே பலமாய்
ஓருயிர் ஈருடலாய் வாழ்ந்து
ஔடதமாய் எமைக்காத்த
எம் அன்புத் தெய்வத்திற்கு



குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணுலகில்
17 . 07 . 1953

விண்ணுலகில்
06 . 01 . 2019

அமரர்

# தங்கவேலாயுதம் தேவேந்திரா

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

விளம்பி ஆண்டு மார்கழி மாதம்
சனி இருபத்தொன்று அமாவாசைத் திதியில்
தக்கதோர் தகமைசார் குருவாய் விளங்கிய
தங்கவேலாயுதம் தேவேந்திரா தந்திமுகன் தாள் சேர்ந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய வெடுத்த பொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவ
தேயிந்த மானிலத்தே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
எங்கெழுந்தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப் போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுது அருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்வீகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்தில் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கையின் நினைவலைகள்

எழில் தரும் ஏத்து தரும் வியாபாரிமூலையில்
எந்தையும் எம் தாயும் செய்த தவப்பயனாய்
எம் மண் போற்றிய மகப்பேற்று மருத்துவர்
கெங்கம்மா தயவில் இணுவில் மண்ணில்
இங்கிதமாய் வந்துதித்தார் 1953 யூலை 17ல்
தந்தையும் மகிழ்வுடன் தெய்வேந்திராணி எனப் பெயர் சூட்ட
தமிழ் எழுத்தரும் தேவேந்திரா எனப் பதிந்து வைத்தார்
அப்பையாவிடம் விஜயதசமியில் ஏடு தொடங்கி அம்மா
பூரணமும் முற்றமணலில் விரல்பிடித்து அ ஆ என
எழுதிப் பழக்க

அண்ணன் நானும் சேர்ந்து எழுதி மகிழ
பாக்கியக்கா தலைமையில் மகேஸ்வரி அக்கா
பொன்னம்மாக்கா கனகம்மாக்கா ஆகியோா
கச்சிதமாக கல்வி பயிற்றுவிக்க - தங்கையும்
அரிவரியில் அடியெடுத்து வைத்து
மேலைப் புலோலி சைவப் பாலிகா பாடசாலையில்
மேன்மையுடன் ஆரம்ப கல்வியைப் பெற்றிட்டார்.

நாச்சிமார் கோயிலில் தந்தையாரும்
நட்டலுடன் வெள்ளி தோறும் விளக்கேற்ற
நலமுடன் சில வெள்ளியில் நாமும்
சின்ன மாமி மூத்தமாமி வீட்டின் ஊடாகச் சென்று
நாச்சிமாரை வணங்கித் துதித்து கிளுவையை சுற்றி வந்து
நல்வினை தனை பெற்று வந்தோம் நாச்சிமார் அருளால்.

அடுத்த வீட்டில் கமலா லலிதா பாமாவுடன்
அழகாய் தென்னம் ஈக்கால் குரும்பையில் குத்தி
தேர் கட்டி இழுத்து
ஓடி விளையாடி
ஓயாது மகிழ்ந்திருந்தோம்
நுங்கு பொறுக்கி சீவி பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலை வெட்டி தும்பாய் கிழித்து
தோட்டத்தில் புல் புடுங்கிப் போட்டு
பசு வளர்த்து பால் குடித்து மகிழ்ந்திருந்தோம்
பழைய பேப்பரில் ஞாயிறு தோறும்
வேலையாள் சாதாரணம் பிள்ளை குழந்தையென
வேறுபட்ட நிறத்தில் வெவ்வேறு தாளில்
பசை பூசி கூப்பன் ஒட்டி கூடி வாழ்ந்தோம்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில்
விஞ்ஞானப் பிரிவில் க.பொ.த உயர்தரம் படித்து பின்
தொழில் நுட்பக் கல்லு"ரியில் சந்தைப்படுத்தல்
கற்கையை சிறப்புடன் பூர்த்தி செய்து
மூன்று மாதத்தில் அளவையியல் கற்று - அதில்
A.L ல் A சித்தி பெற்று
யாழ் பல்கலைக் கழகம் புகுந்து
வணிகமாணிப் பட்டம் பெற்று பரவசமடைந்தார் காண்.

உயர் சந்தைப்படுத்தல் சான்றிதழும்
வணிகமாணிப் பட்டமும் ஒன்று சேர
உயர் புள்ளி கிடைத்திடவே
கூட்டுறவுப் பரிசோதகர் நியமனம் பெற்று
சில மாதம் சிறப்புடன் சேவையாற்றி சேடியம் புரிந்தார்
பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைத்ததும்
1985ல் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தில்
வணிக ஆசிரியராய் பண்புடன் பரவசமாய் பதவி ஏற்றார்.

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம்
மகாதேவா ஆசசிரமம் இடையில் வீடெடுத்து
கொம்படியால் போய் வந்து
விருப்புடனே கற்பித்து பாங்குடன் சேவையாற்றி
பலரும் போற்ற வாழ்ந்திருந்தார்.

1990ல் வளமிகு வல்வெட்டியில்
அழகையா தங்கவேலாயுதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவலுடன் கைபிடித்து
ஆனந்தமாய் வாழ்ந்திருந்தார்.

ஐந்தாண்டுக்கு மேல்
கிளிநொச்சி இந்து ம.வி யில்
மகிழ்வுடன் சேவையாற்றி
சிவப்பிரகாச மகா வித்தியாலயத்துக்கு
மாற்றலாகி சிறப்புடன் சேவை புரிந்தார்.

கணவர் போதும் ஆசிரியர் சேவை
புறப்பட்டு வா சவுதிக்கென அழைப்புவிட
1996 ல் ஓய்வு பெற்று சவுதி சென்று
சதி பதியாய் வாழ்ந்திருந்தார்.
1999ல்சவுதியில் வேல்கஜா எனும் ஆண்மகவைப் பெற்று
ஆனந்தமாய் வாழ்ந்து வந்தார்.

சவுதி செல்லமுன்பச்சைக் கற்பூரம் விளைந்த
எம்மூர் பிள்ளையார் கோயிலில்
தந்தையார் செய்து வந்த ஆனி உத்தர அபிஷேகத்துக்காக
பிள்ளையார் கதை உற்சவமொன்றை
செழுமையுடன் தொடர்ந்து செய்துவந்தார்.
தன் தங்கை மகேந்திராணி திருமணத்தை
1994ம் ஆண்டில் ஆவலுடன் நடாத்திவைத்தார் .

சுனாமியின் பின் 2004ல் - குடும்பமாய்
ஊர் திரும்பி உவகையுடன் வாழ்ந்திருக்க
தம்பி தம்பியென அழைத்து தன் மைந்தன் கல்விச் சிறப்புக்
கண்டு களிப்புடன்
தன் தனயன் பிறந்த நாளை
தன்மை பெற நடாத்தி வந்தார்.

மூளை நரம்பொன்றில்
இரத்தோட்டம் தடைபடவே
மூளைக் காச்சலா என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியர்கள் வினா தொடுக்க
நிமோனியா நிலை எடுத்து
2019 ஜனவரி 06 ஞாயிறு காலை 2.40 க்கு
நிமலனடி சேர்ந்தார் காண் .

சுபம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அண்ணன்,
கதிரவேற்பிள்ளை கதிரமலை

ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்
வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறைந்த கோடியே
–சிவவாக்கியம்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.,
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ :021 2280024 021 2221595,
:021 2280024 021 2221595,
:077 6913244
:shritharanmp@gmail.com
:www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka
☎ :021 2280024 021 2221595,
:021 2280024 021 2221595,
:077 6913244
:shritharanmp@gmail.com
:www.shritharan.com

# என் இன்னோர் அன்னைக்கு இதய அஞ்சலிகள்

யாழ்ப்பாணத்தின் வியாபாரி மூலையை தனது பூர்வீகமாகக் கொண்டு ஆசிரிய சேவைக்காக தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்ததோடு மாணவர்கள் மத்தியில் வெறுமனே ஓர் ஆசானாய் மட்டுமன்றி அன்னையாய், வழிகாட்டியாய், என் போன்றோரை ஏற்றிவிட்ட ஏணியாய் இருந்து என் நெஞ்சமெங்கும் நிறைந்திருக்கும் ஆசிரியை திருமதி.தங்கவேலாயுதம் தெய்வேந்திரா அவர்களது இறப்பு எல்லோரையும் போலவே என்னையும் கலங்கவைத்த இழப்பு எனலாம்.

ஆசிரியர் - மாணவன் என்ற அடிப்படையிலே அவருடனான அறிமுகம் நிகழ்ந்திருந்த போதும் என்னைப் பெற்றெடுத்த அன்னை, தந்தைக்கு அடுத்தபடியாக என் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வலுசேர்த்த இரண்டாம் அன்னையாகவே இன்றளவும் என்னால் அவரைப் பார்க்கமுடிகிறது. எத்தனையோ, வேதனைகளும், சோதனைகளுக்கும் மத்தியில் இல்லாமையோடும் இயலாமையோடும் குருகுலத்தின் குழந்தையாய் கிளி / இந்துக்கல்லூரியில் நான் கல்வி பயின்ற காலமது. பாடசாலை முடிவுற்ற பின்னரான மாலை சேர வகுப்புகளுக்கு மதிய உணவருந்திவிட்டு வரும் மாணவர்களுக்கு மத்தியில் அதற்கான வாய்ப்புக்களற்று நான் மட்டும் பசியோடு இருப்பதைப் பார்த்து தன் சொந்தப் பணத்திலேயே எனக்கு உணவளித்த கருணையுள்ளம் அவருடையது.

பாடசாலைக் காலத்தில் பேச்சுப் போட்டிகளிலும், கட்டுரைப் போட்டிகளிலும் கலந்துகொள்ளும் போதெல்லாம் பணத்தையும், பாசத்தையும் சேர்த்தே கொடுத்து ஊக்கப்படுத்தி வாழ்க்கைப் பாதையை வகுத்துக்கொடுத்த வழிகாட்டியாய் இருந்ததோடு ஏழைக் குடும்பத்தின் பிள்ளையாய், எதிர்காலம் குறித்த ஏக்கங்களோடும் பொருளாதார நெருக்கீடுகளோடும் நான் கல்வி கற்ற காலத்தில் முதல் முதலில் எனக்கென்று சொந்தமாய் ஓர் துவிச்சக்கர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டியை பரிசளித்த இவ் ஆசிரியரின் பாசமும் நேசமும் என்றென்றும் என்னால் நினைவுகூறப் படக்கூடியவை.

மிகச் சாதாரணமான குடும்பமொன்றில் பிறந்து, ஏழை மாணவனாய், ஆசிரியராய், அதிபராய் இருந்து இன்று நாடாளாவிய ரீதியில் அறியப்படும் ஓர் பாராளுமன்ற உறுப்பினராய் படிப்படியாய் வளர்ச்சி கண்டிருக்கும் எனது வாழ்க்கையை வளப்படுத்தி, வலுப்படுத்திய பெருமை தெய்வேந்திரா ரீச்சரையே சாரும்.

"வெற்றிடங்களை ஒரு போதும் இயற்கை விட்டுவைப்பதில்லை" என்பார்கள். ஆனால் எப்போதும் சிரித்த முகம், மற்றவர் துன்பம் கண்டு நெகிழும் உள்ளம், எதையும் நேருக்கு நேர் சொல்லிவிடுகின்ற நெஞ்சுரம், மனத்தாலும் பிறர்க்கு தீங்கிளைக்காத தன்மையோடு கருணை, காருண்யம், அன்பு, பண்பு, பாசம், நேசம் என்னும் போற்றுதற்குரிய மனிதப்பண்புகளை மட்டுமல்ல இறைவனால் கூட இட்டு நிரப்பிவிட முடியாதென்பது நிதர்சனமே! ஒரு நல்ல மனைவியாய், தாயாய், ஆசானாய், என்போன்ற ஏராளமானோரின் இரண்டாம் தாயாய், வாழ்க்கையின் வழிகாட்டியாய் இருந்து அந்திமகாலம் வரை தன் சார்ந்தோரின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வலுசேர்த்து வாழ்ந்திருந்த அமரர் திருமதி. தங்கவேலாயுதம் தெய்வேந்திரா அவர்களின் இழப்பென்பது அவரது குடும்பத்திற்கு மட்டும் நிகழ்ந்த இழப்பல்ல. அவரால் உருவாக்கப்பட்ட ஒட்டுமொத்த மாணவ சமூகமொன்றின் உணர்வுகளோடு ஒன்றிக் கலந்து நின்ற ஒரு உயரிய மனிதரின் பேரிழப்பாகவே என்னால் பார்க்க முடிகிறது.

வாழும் காலம் முழுவதும் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த அமரரின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரது கணவர், மகன் மற்றும் உறவுகளின் துயரில் நாமும் பங்கெடுப்பதோடு அவரது ஆத்மா சாந்தி பெறவும் எல்லாம் வல்ல எம்பெருமானின் பாதாரவிந்தங்களை பணிந்து நின்கிறேன்.

சிவஞானம் சிறிதரன்,<br>
பாராளுமன்ற உறுப்பினர்,<br>
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,<br>
இணைத்தலைவர் - மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு,<br>
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரட்டும் உன் பணி - தேவ இந்திரா

வடமராட்சியின் கண் அமைந்த சிறப்புமிக்கதோர் கிராமம், வியாபாரிமூலை. கல்வி மான்களைத் தன்னகத்தே கொண்டது, நாற்புறமும் கோயில்கள் எல்லைகளாக அமையப்பெற்று சமய அறநெறிகளையும், கலாசாரத்தையும் பேணும் மக்களால் நிறைந்தது.

Green - பசுமை நிலம்
Blue - நீலக் கடல்வளம்
Brain - மூளை வளம்

உடைத்து நம் ஊர். தங்கவேலாயுதத்தின் ஆளுமை மனைவியும் வேல்கஜனின் அன்புத் தாயாரும், நண்பன் கதிரமைல மகேந்திரராணியின் பிரியமான சகோதரியும் ஆகிய இவர் எளிமை, கௌரவம் மிக்க குடும்பத்தில் பிறந்தார். அன்பு மனைவியாகவும், பாசமுள்ள தாயாகவும் பிரியமான சகோதரியாகவும் திகழ்ந்தார்.

வேல் பாய்ந்ததுவோ, என் நெஞ்சில் துளைத்தது உன் மரணச் செய்தி.

உன் பயணம் முடிந்த தொன்றல்ல
முடிவல்ல அது ஆரம்பம்
சுழன்று சுற்றும் பூமியில் பந்து போல
உருண்டு ஓடட்டும் உன் பணி / நோக்கு
மாதா பிதா குரு தெய்வம்
சான்றோர் வாக்கு இது
குரு என்பதன் பொருள்
தந்தாய் - இது வன்றோ
வாழ்ந்த காலம் பெரியதல்ல
செய்த சேவையின் அளவே பெரியது.

Not measured by the number of years lived
but the amount of deeds you performend.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையின் அளவு அல்ல தரத்தின் அளவுதான்.
Not the quantity but the quality.
காலத்தால் அழியாது சரித்திரம் உள்ளவரை சொல்லும் உன் கதையை காலம் என்ற நிலத்திலே உன் காலடி பதித்து விட்டாய் laid the foot prints on the sands of time ஆசிரியர் சேவையில் நீர் ஓர் அர்ப்பணிப்பு. Part & partial of teaching profession. பொருளும் புகழும் வாழ்ந்தார் அல்ல நீ.
Not for the Name & Fame. எளிமை, அமைதி, அடக்கம் உன் பண்புகள்.

இலை மறை காயாக வாழ்ந்த உன்னை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தது. பாரளுமன்ற உறுப்பினர் சிறிதரன் - உணவு, துவிச்சக்கரவண்டி கொடுத்த அந்த உருக்கமான அஞ்சலி (செய் நன்றி உரை) இது உன் வாழ்வில் ஓர் மைல்க்கல்.
Mile stone in your life.

வலது கை கொடுத்ததை இடது கை அறியாது என்பர். தோன்றின் புகளுடன் தோற்றுக உனக்கு உவமை இவை. சனி, ஞாயிறு காலை, மாலை வேளைகளிலும் ஏனைய நாட்களில் மாலை நேர வகுப்புக்கட்கும் மகனை கையில் பிடித்து கல்விக் கூடத்திற்கு அழைத்துச் சென்று முடியும் வரை கால கடுக்க காத்திருந்து தவறாது நீ ஆற்றிய கடமை உணர்வை மறவாது என் நெஞ்சம்.

வேல் உண்டு உனைக் காக்க தங்க வேல் உண்டு உனக்காக நிம்மதியாகத் தூங்கு. ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அவரது இறந்த துயரில் துடித்து ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களை பகிர்ந்து நிற்கும்

ஓங்குக உன்புகழ் பல்லாண்டு
அன்பின் அன்பன்
பரமானந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

முன்னாள் ஆசிரியை திருமதி.தெய்வேந்திராதேவி தங்கவேலாயுதம் இறைவனடி சேர்ந்தமை எமக்கெல்லாம் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. நான் யா/தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் விஞ்ஞான பாட ஆசிரியராக கடமையாற்றியபோது வர்த்தக பாட ஆசிரியராக அதே பாடசாலையில் சிறப்பாக சேவையாற்றியிருந்தார். சுமார் நான்கு வருடங்கள் அங்கே கடமையாற்றியபோது எல்லா மாணவர்களுடனும் மிக அன்பாகவும் அதே நேரம் ஓர் ஆசிரியருக்குரிய கண்டிப்புடனும் கடமையாற்றுவார். தொண்ணூறுகளில் அங்கே கற்ற பல மாணவர்கள் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பத்தில் இருந்து வந்தவர்கள். அவர்களின் தேவைகள் குறித்து நன்கறிந்து வைத்திருப்பார். தன்னாலான சிறிய உதவிகளை எவருக்கும் தெரியாமல் வழங்குவார்.

தனது வகுப்பில் உள்ள மாணவர் கல்வி அடைவுகளில் முன்னேறி வருகின்றனர் என்று அறிந்தால் மகிழ்வடைந்து மேலும் வகுப்புக்களை ஏற்பாடு செய்து கற்பிப்பார். ஏனைய ஆசிரியர்கள் மற்றும் அதிபரைப் பற்றி குறை கூறுவதை விரும்பாத ஆசிரியராக இருந்தார். சிறந்த பண்புகள் அவரிடத்தில் இருந்ததை அவதானித்தேன்.

சிறந்த ஆசிரியராக உற்சாகமாக கற்பித்த அவருக்கு கணவர் வேலைசெய்கின்ற நாடான சவூதி அரேபியாவிற்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மிகவும் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. தான் விரும்பிய நேசித்த ஆசிரியத் தொழிலை விட்டு சவூதி செல்ல மனமில்லாமல் பல நாட்கள் வருத்தத்துடன் இருந்ததை அவதானித்தேன். சக ஆசிரியர்கள் ஆறுதல் சொன்னார்கள். அப்போது ஒரு ஆசிரியர் கூறியது எனக்கு இப்போதும் ஞாபகத்தில் இருக்கின்றது. "இராமன் இருக்கும் இடம்தான் சீதைக்கு அயோத்தி" என்று அந்த ஆசிரியர் கூறினார். உண்மையில் கணவன் வாழும் தேசத்திற்கு செல்வதற்காகவே தான் மிகவும் நேசித்த ஆசிரியத் தொழிலை விட்டு சவூதி அரேபியாவிற்குச் சென்றார். அங்கே அருமை மகன் வேல்கஜாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றெடுத்து சிறிது காலம் வாழ்ந்துவிட்டு தாயகம் திரும்பினார்.

நான் மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு அதிபராகச் சென்றபோது அவருடைய மகன் வேல்கஜா அங்கே கற்றுக் கொண்டிருந்தார். மகனின் கல்வியில் மிகவும் அக்கறைகாட்டினார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வேல்கஜா சிறந்த அடைவைப் பெற்றுக்கொண்டமைக்கு தாயாரின் தொடர்ச்சியான அக்றையே காரணம். இன்று வேல்கஜா நான் அதிபராக கடமையாற்றும் யா/விக்னேஸ்வரக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்று வருகின்றார். இந்த வேளையில் தாயாரின் இழப்பு குடும்பத்தினருக்கு துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இயற்கை நியதிகளின்படியே எல்லாம் நடைபெறும் என்பதற்கிணங்க இந்த துன்ப நிலையை வெற்றிகொண்டு வாழ்ந்து, ஆசிரியை திருமதி. தெய்வேந்திரா தங்கவேலாயுதம் அவர்களின் கனவை நனவாக்குவதே எஞ்சியிருப்போரின் கடமையாகும். ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

மு.கனகலிங்கம்,
அதிபர்,
யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி.

வடிவால் நேரானது என்றாலும்
செயலால் அம்பு கொடியது
கழுத்தால் வளைந்தது ஆயினும்
செயலால் யாழ் இனிது
அதனால் தோற்றத்தால் அன்றி
செயலால் மனிதரை எடைபோடுக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கவேலாயுதம் தெய்வேந்திரராணி அவர்களின் பசுமையான நினைவுகள்

வியாபாரிமூலை என்ற பழம் பெரும் கிராமத்தின் தோன்றல்கள் பல தேசங்களுக்கும் இடங்களுக்கும் சென்று கண்ணியமான வகையில் பொருள்கள் ஈட்டியவர்கள். கல்வியில் சிறந்து விளங்கியவர்கள். அதன் அடையாளங்களை கிராமத்தில் இன்றும் காணலாம். அந்த வகையில் வர்த்தகர் கதிரவேற்பிள்ளை துணைவியார் பூரணம் தம்பதியரின் புத்திரியாக 1953.07.17 அன்று அவதரித்தவர் தெய்வேந்திரராணி அவர்கள். தனது ஆரம்பக் கல்வியை யா∴மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் (சைவப் பாலிகா பாடசாலை) உயர்கல்வியை யா∴மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரியிலும் கற்று பிரகாசித்தவர். யாழ் பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பட்டதாரி ஆகிய இவர் மிகவும் அன்பும் அக்கறையும் ஆளுமையும் கொண்டவர். தனது ஆசிரியர் பணியை கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் (னு7) ஆரம்பித்து தொடர்ந்து யா∴ தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலையிலும் அர்ப்பணிப்புடன் சிறப்புற ஆற்றி இருந்தவர். போர்ச் சூழலில் போக்குவரத்து வசதிகள் முடக்கப்பட்ட நிலையில் கூட கிளிநொச்சியில் சிறப்பாக பணியாற்றி மாணவர் மனங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார் என்பது எமது கிராமத்திற்கு பெருமை சேர்க்கிறது. கஷ்டப் பிரதேசத்தில் தமது சொந்த அசௌகரியங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பணி செய்யும் காலத்தில் ஒவ்வொரு மாணவரின் கல்வியில் மட்டுமன்றி குடும்ப பின்னணி பொருளாதார நிலைமை குறித்தும் கருத்தில் எடுத்து அவர் ஆற்றிய உதவிகள் காலத்தினால் கைமாறு எதிர்பாராமல் இடது கை அறியாமல் வலதுகையால் வலதுகையால் செய்யப்பட்டவை. இதன் நிமித்தமாக பல நன்றியுள்ள மாணவர்கள் தொடர்ந்தும் அவரின் விசுவாசியாக தொடர்புகளை இன்றுவரை பேணி வருகின்றனர். மதிய உணவு திட்டம் செயல்படாத காலத்தில் உணவிற்கு சிரமப்படும் மாணவர்களுக்கு தனது சொந்த செலவில் மதியம் உணவு வழங்கி அவர்களுக்கு உரிய மாலை நேர வகுப்புக்களை எடுப்பதையும் அவர்களது பாடசாலை உபகரண மற்றும் கல்வி தேவைக்கான நிதியை வழங்குவதிலும் அக்கறையாக இருந்தவர் என்பது அவரது அக்கால மாணவர்களிடம் இருந்து கிடைத்த உருக்கமான தகவல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த பண்பான குடும்பத் தலைவியாகவும் விளங்கிய அவர் இல்லறமே நல்லறமாக வள்ளுவர் காட்டிய வழியில் பார் போற்ற வாழ்ந்து 2019.01.05 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அவரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்போமாக.

அம்மா நீங்கள்

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்,
ஞாலத்தின் மாணப் பெரிது.

உங்கள் பணிகளால் உலகினுக்கே பெருமை

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்,
பெருமை உடைத்துஇவ் வுலகு.

உங்கள் கல்வியும் செல்வமும்

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்,
பேரறி வாளன் திரு.

என்று உங்கள் பணியில் யாம் பெருமை கொள்கிறோம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்,
தெய்வத்துள் வைக்கப் படும்.

முருகுப்பிள்ளை சிவநேசன்
ஒய்வுநிலை வங்கி முகாமையாளர்
வியாபாரிமூலை பருத்தித்துறை
2019.02.04

கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே
நல்லது ஏனெனில் அறியாமை தான்
தீவினையின் மூலவோ்.

-பிளேட்டோ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வோம் நாம்

நிகழ் காலம்
அது எதிர்காலத்தின் ஏணி
உச்சத்தில்
நின்று நோக்கினால் தான்
உலகின் பிரமாண்டம் தெரியும்
அறிவின் ஆழத்திற்குச் செல்
மனதின்
போராட்டத்தை நிறுத்து
மூன்று காலங்களை
உணர்ந்து கொள்
எதிர்பார்ப்புகளை எரித்துவிட்டு
எதுவரினும் ஏற்றுக் கொள்
வசந்தம் வரும்
வாழ்வோம் நாம்.

த.வேல்கஜா

வரும் போகும் இன்பமும் துன்பமும்
வந்தால் போகாதது பழியும் பாவமும்
போனால் வராது மானமும் உயிரும்
போயே தீரும் திருடிய செல்வம்
தவிர்க்க முடியாதது தாகமும் பசியும்
அழிவைத் தருவது கோபமும் பொறாமையும்
ஆக்கத்தைத் தருவது அன்பும் பண்பும்
எல்லோருக்கும் சமமே பிறப்பும் இறப்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாய் நான்

நித்திலம் கொழிக்கும் வயல் நிலத்தில்
ஆடி மழையும் தேடி வர
நில எடுப்பும் நாடி உழ
செய்நிலமும் செழுமையுறும் செயலாய் நான்

புரட்டாதியில் சருகிட்டு நெல் விதைத்து
அடுத்து உழுது மறுத்து உவகையுடன்
மிதமாக மழை பொழிய முளையும்
இரண்டிலையாய் மூவிலையாய் விரியப் பாாத்திருப்போம்

மழை வெள்ளத்தில் உரமிட்டு மருந்திட்டு
மாதம் இரண்டரையில் குடலை வர
வாடைவர மாடும் வரும் அதனை
மறித்து விரட்டி மகிழ்வுடன் காத்திருப்போம்

முற்றும் கதிர் கண்டு முறுவலுடன்
சாயும் கதிர் கண்டு அறுவடையில்
இயந்திரம் கொண்டு நெல் எடுத்து
பொலியென பொங்குவோம் செயலாய் நாமே.

கதிர்.

ஓடி ஓடி வேர்வை சிந்த உழைத்து
நாடி நாடி நாலு காசு சேர்த்து
தேடி நாடி பிள்ளைகளை வளர்த்தெடுத்து
ஆடிப் பாடி பரமனைத் தொழுதேற்று
வாடி வாடி வதங்கி மாளும் மானிடமிது.

கதிர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பூசை

தம்பி நாங்கள் கோயில் கட்டி
சாமி யொன்றை உள்ளே வைத்து
கும்பிட் டிங்கு பூசை செய்வோம்
கூடி ஆடி பாடிக் கொள்வோம்.

நானே ஐயா நானே மேளம்
நானே நல்ல காவடி யாட்டம்
தான தான தந்தன தான
தான தான தந்தன தான

ஓட்டை வாளி நல்ல மேளம்
ஓலைச் சுருளே நாத சுரம்
பாட்டுப் பாடி பஜனை செய்வோம்
பக்தி யோடும் பூசை செய்வோம்.

நாட்டு மேளம் நன்கு கொட்ட
நாலு சிறுவர் சாமி தூக்க
வீட்டைச் சுற்றி வீதி வருவோம்
வேண்டிய வரமும் சாமி தருவார்.

வே.சிவக்கொழுந்து
(யாழ்ப்பாணன்)

முடிவே யில்லாத வாழ்வும் இல்லை
பிரிவே யில்லாத உறவும் இல்லை
யமனை வென்றவர் யாரும் இல்லை
வலியை வெல்லா வாழ்வும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



எங்கள் குடும்ப ஒளி விளக்காய்த் திகழ்ந்த அமரர். திருமதி.தங்கவேலாயுதம் தேவேந்திரா அவரின் ஆத்மா சிவனின் பாதார விந்தங்களை சென்றடைந்த செய்திகேட்டு வருகைதந்து. எமது ஆற்றொணாத் துயரில் கலந்துகொண்டு ஆறுதல் மொழிபல கூறி, எம்மைத் தேற்றியோருக்கும், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் ஊடாக இரங்கற்செய்தி தெரிவித்தோருக்கும், தொலைபேசி, முகநூல் ஊடாக இரங்கல் கூறியோரிற்கும் மற்றும் பல்வகை உதவிகள் புரிந்த மந்திகை, யாழ்ப்பாண வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்களிற்கும் பல உதவிகள் புரிந்து இறுதிநிகழ்வில் நேரடியாக கலந்து கொண்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்களிற்கும் மற்றும் இன்றைய இவ் அந்தியேட்டி சபண்டீகரண கிரியைகளிற் கலந்துகொண்டு அமரரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்தோருக்கும். உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னாரின் மாணவர்கள், கிரியைகள் நிறைவேற்றிய சிவாச்சாரிய பெருமக்களிற்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

**வியாபாரிமூலை,**
**பருத்தித்துறை.**



**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி நீர் சொரிகின்றோம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 | 06 |
| 07 | 01 |
| 1953 | 2019 |



அமரர்

## தங்கவேலாயுதம்- தேவேந்திரா

காதோரம் வந்த
சேதி கனவாகிப்போகாதோ
கதறித்துடிக்கும் மனம் ஆறுதலைக்
காணதோ! நேற்றுச் சிரித்தபடி
எம் முன்னே இருந்தவரே,
எமமைக் கலங்கவிட்டு எங்கு நீர் சென்றீர்

பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்

Photo Vision 021 222 3989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை!!!



மலர்வு
1953.07.17

உதிர்வு
06.01.2019

எமது நண்பன் த.வேல்கஜா அவர்களின் அன்புத்தாயார்

## அமரர் தங்கவேலாயுதம் தேவேந்திரா

திங்கள் ஒன்று ஆனதுவோ-தாயே
உங்கள் பிரிவுத் துயர் செய்தி கேட்டு
மீளாத்துயரில் வாடும் -எங்கள்
நண்பனை ஆற்றிடுவோம்.
மலரும் சருகாகும் ஒருநாள்
நண்பா அதை நீ -உணர்வாய்
என்றே எண்ணி ஆறிடுவோம்.

பிரிவுத் துயரில் வாடிநிக்கும் நண்பனுக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/விக்னேஸ்வரா கல்லூரி
A/L மாணவர்கள்
(2019 & 2020)

AGN PRINTERS. 0776042800



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 17 | 06 |
| 07 | 01 |
| 1953 | 2019 |



அமரர்

## தங்கவேலாயுதம்- தேவேந்திரா

**கோபுரம் சாய்ந்ததே**
**கொடுந்துன்பம் நேரிட்டதே**
**எங்கள் கோலங்கள் அழிந்ததுவே**
**தாங்க முடியாத துயரத்தில்**
**தவிக்குதம்மா எம் நெஞ்சு!**
**அமைதியாக துயிலும் தாங்கள்**
**ஆத்மா இறைபாதம் சேர**
**இறைவனை இறைஞ்சுகின்றோம்**

பிரிவால் துயருறும்
**நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி நீர் சொரிகின்றோம்

பிறப்பு

17

07

1953



இறப்பு

06

01

2019

அமரர்

## தங்கவேலாயுதம்- தேவேந்திரா

காதோரம் வந்த
சேதி கனவாகிப்போகாதோ
கதறித்துடிக்கும் மனம் ஆறுதலைக்
காணதோ! நேற்றுச் சிரித்தபடி
எம் முன்னே இருந்தவரே,
எமமைக் கலங்கவிட்டு எங்கு நீர சென்றீர்

பிரிவினால் துயருறும்
கணபதி உணவகம்

Photo Vision 021 222 3989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 17 | | 06 |
| 07 | | 01 |
| 1953 | | 2019 |



## அமரர் தங்கவேலாயுதம் தெய்வேந்திரா

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

பிறந்தவரெல்லாம் இறப்பது என்பது
இறைவனின் நியதி
மாண்டவர் மீண்டு வரார்
என்பதும் படைத்தவனின் விதி
ஆனாலும் மனம் ஆறுவதில்லை
நெஞ்சமோ தேறுவதில்லை
காலவோட்டத்தில் எல்லாம்
காலமாகும் அதுவரை
நெஞ்சமே நீ அமைதி கொள்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வேர் கோவிலடி,
இன்பர்சிற்றி.

பிரிவால் துயருறும்
ரவிச்சந்திரன் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 17 | 06 |
| 07 | 01 |
| 1953 | 2019 |



அமரர்

## தங்கவேலாயுதம்- தேவேந்திரா

**கோபுரம் சாய்ந்ததே**
**கொடுந்துன்பம் நேரிட்டதே**
**எங்கள் கோலங்கள் அழிந்ததுவே**
**தாங்க முடியாத துயரத்தில்**
**தவிக்குதம்மா எம் நெஞ்சு!**
**அமைதியாக துயிலும் தாங்கள்**
**ஆத்மா இறைபாதம் சேர**
**இறைவனை இறைஞ்சுகின்றோம்**

பிரிவால் துயருறும்
அழகையா குடும்பம்
மக்கள் ,மருமகள்
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

கலைமணி ச.சமூகநிலையத்தின் தலைவர் க.கதிரமலை அவர்களின் அன்புச்சகோதரி



## அமரர்
## தங்கவேலாயுதம் தெய்வேந்திரராணி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1953.07.17 | 2019.01.05 |

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அவர்தம் குடும்பத்தார்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

கலைமணி சனசமூக நிலையம்
கலைமணி முன்பள்ளி
வியாபாரிமூலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பரமுப்பிள்ளை + *பொன்னம்மா

*அன்னப்பிள்ளை
+
*செல்லையா

*கதிரவேற்பிள்ளை
+
*பூரணம்

*முருகுப்பிள்ளை
+
*நாகம்மா

*கந்

*செ

*சிவக்கொழுந்து
+
*குமாரசாமி

கதிரமலை
+
இராஜலட்சுமி

***தேவேந்திரா**

மகேந்திரராணி
+
*நடராசா

தங்கவேலாயுதம்
+
வேல்கஜா

*செல்வமணி
+
யோகானந்தம்

குகானந்தன்
றமேஸ்
அரவிந்தன்
*சுரேஸ்
கார்த்திகா
யசோதா
கேதீசன்
பரந்தாமன்

செல்வராணி
+
சிவசோதிலிங்கம்

ஸ்ரீசுதன்
சுதாஜினி
சதீஸ்வரன்
சிவகர்

யோகராணி
+
வினாயகமூ

துஸ்யந்தன்
சசி
லானியா
சபேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

ா

*கந்தவனம் + *செங்கமலம்

*தங்கம்மா + *சிவசம்பு

*கந்தையா + *செல்லம்மா

முந்து

பி

*அழகையா + *நவரத்தினம்

*பொன்னம்மா + *சின்னையா

*அழகம்மா + *பொன்னையா

மகாலிங்கம் + இராசபூபதி

கராணி

யகமூர்த்தி

பந்தன்

யா

ன்

தங்கேஸ்வரன் + தவமலர்

ஜீவிதா

கபிலன்

*துவாரகன்

கேதீஸ்வரன் + றஞ்சினி

தர்சிகா

சயன்

கெந்தீஸ்வரன்

வாசுதேவன் + பிறேமராணி

* இக்குறியீடு அமரரைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப ஒளி

சீலத் திருவிளக்கே சீதேவி லசஷ்மியே
கோலத்  திருவிளக்கே கும்பிட்டேன் நின்னடியே
தில்லை வன நாதனும் சிவகாமி அம்மையையும்
சிந்தையில்  கொண்டிருக்க செய்தவினை நீங்கிவிடும்
தந்தை தமர் தாய் சார்ந்த குரு  அரசும் சிந்தை
மகிழ்வாழ்வை தேவியே செய்தருள்வாய்
தொட்டிலுக்குப் பிள்ளையும் தொழுவிற்கு பால் பசுவும்
பட்டறைக்கு நெல்லும் பதிந்த மரக்காலும்
உனக்கெரிக்க  எண்ணையும் எனக்குண்ணச் சோறும்
தட்டாமல் தாயே தந்தருள்வாய் தகவுறவே
அரியவினை தீர்ககும் ஆனை முகத்தோனே
அலரி சண்பகம் கதலி முக்கனி ஆனபடி படைத்தேன்
அன்பின் மணிவாசகத்தை ஞானம் பெறவே
நயந்தோதினேன் அருள்வாய்.



**தீபன் பதிப்பகம், பருத்தித்துறை - 0776520315**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org